உ

முருகா

# 'தேர்'

திருத்தேரின் மகிமை, தேர்த்திருவிழா பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு.

பதிப்பு: இரத்தாக்ஷி வருடம், ஆவணி மாதம்
(செப்ரெம்பர், 1984)

பதிப்பித்தோர்: யாழ். குளோபல் கொம்யூனிக்கேஷன்ஸ்

பிரதிகள்: 5000

முருகன் அடியார்களுக்கு இலவசம்

**நன்றி**

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தேர்த்திருப்பணி மலரிலிருந்து இந்நூல் தொகுக்கப்பெற்றது. இத்தேவஸ்தானத்திற்கும், சபையினருக்கும், மலர் ஆசிரியர்க்கும், கட்டுரையாளர்கட்கும் இந்நூல் பதிப்பாளர்களின் கடப்பாடும் மனமார்ந்த நன்றியும் உரித்தாகுக.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்

வழங்கிய

# அருளுரை

உ

குருபாதம்

அருள்மிகு தொண்டைமானாற்றுச் செல்வச்சந்நிதி முருகனுக்கு புதிதாக ஆக்கப்பெற்ற தேர் ஓர் கலைப்பொக்கிஷம். இப்பணிக்கு உதவிய, உழைத்த அடியார் பெருமை இயம்புதற்கரியது.

மாதிரி உலகத்தினைக் கலைஎழில் கொஞ்சச் சித்தரித்துக் காட்டுவதாகிய தேரில் முருகப்பெருமான் எழுந்தருளித் தன் அடியார்களுக்குத் திருவருள்பாலிக்கும் தேர்த்திருவிழா நினைவாக, தேர்த்தத்துவத்தினைத் தெளிவுறத் தேர்ந்திட உதவும் அரிய கட்டுரைகளைக் கொண்ட மலர் ஒன்றினை யாழ். குளோபல் நிறுவனத்தினர் செவ்வனே தொகுத்துச் செல்வச்சந்நிதி முருகன் அடியார்களுக்கு இலவசமாக வழங்க முன் வந்தது முருகன் திருவருளே.

ஆறுமுகநாவலர் பெருமானின் சைவவினாவிடை, நல்லை நகர்க் கந்தர் ஊஞ்சல் ஆகியவற்றினை மறுபதிப்புச் செய்து வெளியிட்டும், ஓதுவார் மூர்த்திகள், பஜனைக் குழுவினர் ஆகியோரைக் கௌரவித்தும் பக்திசிரத்தையுடன் பணிசெய்து கிடக்கும் அருளாளராக இருக்கும் இத்தொழிலதிபர்களின் சேவை தொடர்ந்து வளர்தல் வேண்டும் என மால் அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூல காரணனன முருகப்பெருமானை மனமாரப் பிரார்த்தித்து, யாவரையும் ஆசீர்வதிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஸ்வாமிகள்**

அருள்மிகு செல்வச்சந்நிதி கந்தசுவாமி கோவில் குரு

## பொ. பாலசுந்தர ஐயர் அவர்கள்

வழங்கிய

# ஆ சி யு ரை

உ

முருகா

செல்வச்சந்நிதி முருகன் தேர்த்திருப்பணி தொடங்கப்பெற்ற நாள் தொடக்கம் அடியார்கள் மத்தியில் ஓர் புத்துணர்ச்சி ஊற்றெடுக்கத் தொடங்கியதைக் காணக்கூடியதாகவிருந்தது. இப்பணி பூரணமாகிப் புதுப்பொலிவுடன் பவனிவரும் தெய்வம், தேவர் சிறைமீட்ட தெய்வம் என்று எண்ணுந்தோறும் அன்புமிக்க தெய்வம் நமக்குண்டு; துன்பம் அத்தனையும் போக்கிவிடும் என்ற நம்பிக்கை பிறக்கின்றது. புன்னெறியதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறியடையச் செய்வான், வினைநீக்கி வேகம் கெடுத்தாளும் வேந்தன் முருகன்.

நாம் செய்யும் கிரியைகளின் தத்துவங்களைப் பொருளுணர்ந்து செய்யும்போது ஞானம் உதயமாகின்றது. தேர்த்திருவிழாவின் தத்துவங்களைத் தெளிவாக விளக்கும் அரிய கட்டுரைகளைக் கொண்ட மலர் யாழ். குளோபல் ஸ்தாபனத்தினரின் முயற்சியினால் வெளியிடப்பெற்று அடியார்களுக்கு வழங்கப்படுகின்றது. இவர்களது சேவை தொடர எல்லாம்வல்ல முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.

உடலுக்கு உயிர்போன்று உள்ளது, உயிருக்கு இறை. இறைவன் திடமாக உறைகின்ற நம் உடலாகிய தேரினை இயம நியமங்களால் புனிதமாகவைத்து நித்திய தேரோட்டமெனும் நம்வாழ்வை இறைவனோடு சேர்ந்த இன்பமாக, இன்பத்தோடு இசைந்த வாழ்வாக ஆக்க வேண்டும் என்று முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.

**பொ. பாலசுந்தர ஐயர்**

உ
சிவமயம்

# பதிப்புரை

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிடும் முருகப்பிரான் அற்புதத் தேரேறி ராஜகெம்பீரமாகப் பவனிவரும் நாளில் நாம் பொருளுணர்ந்து விழாப்பொலிவு காணவேண்டும் என்ற எண்ணத்தினால் இம் மலரினை வெளியிடத் தீர்மானித்தோம். சைவ உலகின் கலங்கரை விளக்காகத் திகழும் அருளாளர் சிலரின் அரிய படைப்புக்களைத் தொகுத்து வெளியிடுகின்றோம்.

செல்வச்சந்நிதி முருகனுக்கு இவ்வற்புதச் சித்திரப் பெருந்தேரை ஆக்க உதவிய, உழைத்த அடியார்களுக்கு இம்மலர் ஒரு சிறு காணிக்கையாகும்.

அன்னக்கந்தன் என்று அன்புடன் போற்றப்படும் செல்வச் சந்நிதி முருகன் அழகுக் கந்தனாக தேரேறிவரும் நாளில் இம்மலரினை அடியார்களுக்கு வழங்கவேண்டும் என்ற ஆர்வத்தினால் குறுகிய காலத்தில் இதனை அச்சிட்டு வெளியிடவேண்டி இருந்தது. இதனால் குறைகள் ஏற்பட்டிருத்தல் கூடும். குற்றம் நீக்கிக் குணம் கொண்டு சிறப்பிக்கும்படி செல்வச்சந்நிதி முருகன் அடியார்களைப் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தேவர் சிறைமீட்ட தெய்வம் நமக்குண்டு; பயமில்லை!

வாழ்க முருகன் நாமம்! வாழ்க முருகன் அடியார்கள்!

**யாழ். குளோபல் கொம்யூனிக்கேஷன்ஸ்**
**லிமிட்டெட்.**

❃

# தேர்

## முன்னோட்டம்

**தேரின் மகிமை** பக்கம் 1

இலக்கிய கலாநிதி,
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

''... ... உயிருக்கு உடம்பு தேர்; அந்த உயிர், உயிர்க் குயிராயுள்ள இறைவனுக்குத் தேர்; இந்தப் பூமியை நடுத்தட்டாகக் கொண்ட அண்டமும் அவனுக்குத் தேர்;... ... ...''

**தேர்த் திருவிழா - இறைவனுக்குரிய ராஜோபசாரம்** பக்கம்2

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்.

''... ... பிரமோற்சவம் எனப்படும் பெருந்திருவிழா ஆலயங்களில் நடைபெறும். பிரமோற்சவத்தில் நிகழும் விழாக்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தது தேர்த்திருவிழா. தேர் அரசர்களால் போரில் பெரிதும் உபயோகிக்கப்பட்டது. அரசனுக்கும் தெய்வத்திற்கும் உயர்ச்சி கற்பித்த அடிப்படை நிலையில் கோயில் வழிபாட்டு முறை இராஜோபசாரங்களைக் கோயில்களில் இடம்பெறச் செய்தது ... ...''

**தேர்த் திருவிழா** பக்கம் 6

புலவர் ஏறு திரு. ந. ரா முருகவேள்

''திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பல வகைத் தத்துவ நுட்பங்கள் கொண்டவை.

... ... சிவாலயங்களில் நடைபெறும் தேர்த்திருவிழா, சிவபெருமான் திரிபுர தகனம் செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்துவது... ... ...

... ... பரிவாரங்களுடன் ஆன்மாவானது உடலாகிய தேரை ஊர்ந்துநின்று உலகமாகிய மாடவீதிகளில் உழன்று திரிந்து வருகின்றது ... ... ...''.

**வடிவேலுடனே வருவாய் முருகா!** பக்கம் 14

சுப்பிரமணிய பாரதி

''... ... வடிவேலுடனே வருவாய் முருகா! அடியார் பலரிங் குளரே! அவரை விடுவித்தருள்வாய்!... ... ...

... ... துணிவே! கனலே! கருதிக் கருதிக் கவலைப்படுவார் கவலைக் கடலைக் கடி ... ... ...''

